பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 26 | வெள்ளிக்கிழமை 12.10.2018 | கதிர் 340

இனி இது இரகசியம் அல்ல!

தற்போதைய வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் கூட இல்லை. 23ஆம் திகதி சபையின் கடைசி அமர்வு. 25ஆம் திகதியுடன் இந்த சபை காலாவதியாகும். ஆளுநரின் முழு கண்காணிப்பில் இனிமேல் சபை இயங்கும். பக்கம் 02

# பட்ஜெட் தினத்தன்று காலையில் அரசமைப்புப் பேரவையும் கூடும்

## நேற்றைய வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

புதிய அரசமைப்புக்கான நகல் வடிவ அறிக்கையை புதிய அரசமைப்பு நகலாக ஏற்று விவாதம் நடத்துவதா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அரசமைப்புப் பேரவையின் கூட்டம் (Constitutional Assembly) நவம்பர் 7 ஆம் திகதி பட்ஜெட் தினத்தன்று காலையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும். பக்கம் 11

## ஓட்டோ - கார் மோதி விபத்து; வவுனியாவில் இருவர் சாவு!



வவுனியா, ஒக். 12

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் ஓட்டோ – கார் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பக்கம் 11

## மின் கம்பம் நாட்டத் தோண்டிய குழியில் மனித எலும்புக்கூடுகள்!

### அச்சுவேலிப் பகுதியில் பரபரப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

அச்சுவேலிப் பகுதியில் மின் கம்பம் நாட்டுவதற்கு நிலத்தைத் தோண்டியபோது மனிதஎலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டமையால் அப் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பக்கம் 11

## புதிய பிரதம நீதியரசரை நியமிக்க இன்று கூடும் அரசமைப்புச் சபை

கொழும்பு, ஒக். 12

புதிய பிரதம நீதியரசரைத் தெரிவு செய்வதற்காக அரசமைப்புச் சபை இன்று கூடவுள்ளது என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கூட்டு எதிரணி எம்.பிக்களால் கேள்விகள் எழுப்பட்டவேளையிலேயே, சபாநாயகரால் மேற்படி தகவல் பக்கம் 11

## புலிகளை ஒழித்த மஹிந்தவை மெச்சுகின்றனராம் இந்தியர்கள்

### கூறுகிறார் சுப்பிரமணியன் சுவாமி



கொழும்பு, ஒக். 12

விடுதலைப்புலிகளை ஒழித்தமைக்காக இந்தியர்கள் மஹிந்த ராஜபக்ஷவையும் இலங்கை மக்களையும் மெச்சுகின்றனர் என பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பின் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு வழங்கியுள்ள மின்னஞ்சல் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- பக்கம் 11

## அரசமைப்புச் சபைக்கு 3 சிவில் பிரதிநிதிகள்

### நாடாளுமன்றம் ஒப்புதல்

கொழும்பு, ஒக். 12

அரசமைப்புச் சபைக்குச் சிவில் பிரதிநிதிகள் மூவரை நியமிக்கும் பரிந்துரைக்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைவாக ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கான நியமனங்களுக்கு சபாநாயகர் தலைமையிலான 10 பேர் பக்கம் 11

## வடக்கு – கிழக்கு காணி விடுவிப்பில் நல்லாட்சி அரசும் நேர்மையில்லை!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 12

வடக்கு – கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நில வுரிமையை இன்னும் அரசு முழுமையாகச் சீரமைக்கவில்லை என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு புதிய அரசு பதவி ஏற்றதன் பின்னரும், தேசிய பாதுகாப்பை மையப்படுத்து பக்கம் 11

## கள்ளநோட்டுகளுடன் இருவர் வட்டு. பொலிஸாரால் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

வர்த்தக நிலையங்களில் பொருள்களை வாங்குவது போல் நடித்துக் கள்ள நோட்டுக்களை மாற்ற முற்பட்ட இரண்டு இளைஞர்கள் வட்டுக்கோட்டைப் பக்கம் 11

## புளியங்குளம் சென்றடைந்தது பல்கலை மாணவர் நடைபவனி



வவுனியா, ஒக். 11

அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், அநுராதபுரம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் மேற்கொண்டுவரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பக்கம் 11

## அரசியல் கைதிகள் குறித்து விக்கி தலைமையில் கூட்டம்

### இன்று கைதடியில் நடக்கும்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி 29 நாள்களாகத் தொடர்ச்சியான உணவுதவிர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் நிலையில், அவர்களின் விடுதலைக் பக்கம் 11

## தமிழ்க் கைதிகள் விடயத்தில் எதுவுமே செய்யாத மைத்திரி

### சாடுகின்றார் வடக்கு முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்குக் கடிதங்களை எழுதியபோதும் நேரில் சந்தித்துக் கூறியபோதும் நடவடிக்கை எடுப்பதாக மீண்டும் மீண்டும் கூறிய அவர் ஆக்கபூர்வமான – முழுமையான – நட பக்கம் 11

## 10 மாதங்களுக்குச் சபையில் எனக்கு பேச்சுரிமை மறுப்பு

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 12

ஆட்சிமாற்றத்தின் பின்னர் பரந்துபட்ட ஜனநாயகம், நல்லாட்சி என்று பேசப்படும் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கான பேச்சுரிமை சபைக்குள்ளேயே மறுக்கப்படுவதை எந்த வகைக்குள் கொள்வது என்ற கேள்வி எமக்கு எழுகிறது. பக்கம் 02

## காணிகள் விடுவிப்புக் குறித்து முக்கிய கூட்டம் 16ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக். 12

பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் பக்கம் 11

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான

# மக்கள் நடமாடும் சேவை ஞாயிறு வட இந்து மகளிர் கல்லூரியில்

பருத்தித்துறை, ஒக்.12

பருத்தித்துறை பிரதேச செய லகத்திற்கான ஜனாதிபதியின் “உத்தியோகபூர்வ பணி” (நிலமெஹவர) மக்கள் நடமாடும் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது என்று வடமராட்சி வடக்கின் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள், காலங் கடந்த பிறப்பு இறப்பு, திருமணப் பதிவுகள், சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச் சீட்டு, ஓய்வூதியம் உட்பட பல்வேறு சேவைகளைப் பெற்றுப் பயனடைந்து கொள்ளலாம்.

இலங்கையில் உள்ள 50 இற்கும் மேற் பட்ட திணைக்களங்கள் இந்நடமாடும் சேவையில் பங்குபற்ற உள்ளன. இவற்றிலும் பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

இதுவரை எம்மால் நடத்தப் பட்ட கிராம உத்தியோகத்தர்கள் பிரிவு ரீதியான பிரச்சினைகளும் இச்சேவையில் தீர்த்துக் கொள்ள முடியும்.

வேலையற்ற இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி தொழில் சந்தை ஒன்றும் அதே இடத்தில் காலை முதல் இடம்பெற உள்ளது. அதில் சகலரும் பங்குபற்றி தமக்குத் தேவையான வேலை வாய்ப்புப் பற்றிய தகவல்களையும் வேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதுபற்றிய மேலதிக தகவல்களை பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (இ)

## இனி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை ஒட்டி அன்பர் ஒருவர் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி வேலைகளுக்கு என முதலமைச்சர் விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் வெளிநாடுகளில் பல இடங்களில் நிதி திரட்டப்பட்டுள்ளன. இதனை அவரே பேட்டிகளிலும் அறிக்கைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார். ஒழுங்கு செய்யப் பட்டுள்ள அந்த நிதிகள் அந்தந்த நாடுகளிலேயே உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

2017 ஜனவரியில் முதல்வர் கனடா சென்றுள்ளார். அங்கு அவர் பங்குபற்றிய ஒரு நிகழ்வில் வைத்து ஐம்பது லட்சம் ரூபா பெறுமதிக்கான காசோலை அவரிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் திரும்பவும் ஏற்பாட்டாளர்களிடமே தாம் கையளித்து விட்டு வந்துவிட்டார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிலைமையைப் பின்னர் தெளிவுபடுத்தினார்.

முதல்வர் விக்னேஸ்வரனின் முன் முயற்சியில் சேகரிக்கப்பட்ட நிதி இப்படிப் பல நாடுகளில் தயாராக உள்ளது எனத் தெரிகின்றது.

இங்கு வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் செயற்படத் தொடங்கியதும் அதற்கு இத்தகைய நிதிகளைப் பெற்று உரிய பணிகளை முன்னெடுக்க முதலமைச்சர் திட்டமிட்டிருந்தார். முதலமைச்சர் நிதியத்துக்கான நியதிச்சட்டம் எல்லாம் தயாரிக்கப்பட்டு, சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, அது தொடர்பில் மத்திய அரசு கோரிய திருத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு விட்டன. ஆனால் அந்த நிதியத்தை இயங்க அரசு அனுமதிக்கவேயில்லை.

இந்த நிதியத்தை இயங்க வைப்பதற்கு முதலமைச்சர் எடுத்த பகீரதப் பிரயத்தன முயற்சி எதுவுமே பலிக்கவே இல்லை. அரசு கிணற்றில் போட்ட கல்லாக அந்த விடயத்தை ஒதுக்கி நடந்து கொண்டது.

அதனால் அந்த நிதியம் இந்த முதலமைச்சரின் காலத்தில் இயங்கவேயில்லை. அதனால் முதல்வர் விக்கியின் முன் முயற்சியினால் புலம்பெயர் உறவுகள் மத்தியில் சேகரிக்கப்பட்ட உதவி நிதிகள் வடக்கு மாகாணத்தை வந்தடையவயில்லை.

வரும் 25 ஆம் திகதியுடன் முதல்வரின் பதவி 'அவுட்'. அதற்குப் பிறகு வெளிநாட்டில் கிடக்கும் இந்த நிதி என்னவாகும்? ஆளுநரின் ஆட்சிக் காலத்தில் அவரின் கண்காணிப்பில் மக்களுக்குப் பயன்படுத்தப்படுமா? அல்லது நிதியை வெளிநாட்டில் சேகரித்த தரப்புகள் தமது விருப்பப்படி அந்த நிதியைச் செலவிட அனுமதித்து முதல்வர் விக்கி பார்த்திருப் பாரா? தெரியவில்லை.

தமது பதவிக்காலம் முடிவுற முன்னர் இவ்வாறு தமது முன் முயற்சியில் வெளிநாடுகளில் சேகரிக்கப்பட்டு அங்கு உறைநிலையில் வைக்கப்பட்டிருக்கும் நிதியின் விவரங்கள், அதை வைத்திருக்கும் தரப்புகள், அதை அத்தரப்புகள் என்ன செய்ய வேண்டும் எனத் தாம் எதிர்பார்க்கின்றார் போன்ற விவரங்களை முதல்வர் விக்னேஸ்வரன் - தமது பதவியை விட்டு இறங்க முன்னரே - மக்களுக்குப் பகிரங்கமாகத் தெளிவுபடுத்தினால், அது நல்லது.

அவர் அதனைச் செய்வார் என்று நம்புகின்றோம்.!

-மின்னல்-

## 10 மாதங்களு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 10 மாதங்களுக்கும் மேல் சபையில் எனக்கான பேச்சு நேரம் மறுதலிக்கப் பட்டுவருகிறது. இது எனது சிறப்புரிமையை மீறும் செயல்.

– இவ்வாறு நேற்றுச் சபையில் தெரிவித்தார் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுத் தனது சிறப்புரிமை மீறல் தொடர் பில் வெளிப் படுத்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மக்களின் ஆணை பெற்று நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். எமது ஈழமக்கள் புரட்சிகர முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்தாபகப் பங்காளிக் கட்சியாகும். அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமாக நான் பதவி வகிக்கிறேன். கடந்த தேர்தலில் எமது கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிருந்தது.

அதன் பின்னர் கூட்டமைப்பால் நடத்தப் பட்ட புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்றில் எமது கட்சி பங்கேற்கவில்லை. அது எமது கட்சியின் தனிப்பட்ட முடிவு. அவ்வாறிருக்கையில், இடைக்கால அறிக்கை சம்பந்தமான விவாதம் உட்பட அதற்குப் பின்னரான முழு நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும் எனது கருத்துக்களை முன் வைப்பதற்கான நேர ஒதுக்கீட்டை எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் வழங்குவதைத் தவிர்த்து வருகின்றார் என்பதை நான் ஏற்கனவே பல தடவைகள் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். இருப்பினும் அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை.

போரின் உக்கிரத்துக்கு முகங்கொடுத்த வன்னி வாழ் மக்களின் குரலாக – அவர்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எனக்கான பேச்சுரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். அதுமட்டுமன்றி நான் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை, கோரிக்கைகளை, எதிர் பார்ப்புக்களை வெளிப்படுத்த இடமளிக்காது அவர்களின் குரலை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் பரந்துபட்ட ஜனநாயகம், நல்லாட்சி என்று பேசப்படும் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கான பேச்சுரிமை சபைக்குள்ளேயே மறுக்கப்படுவதை எந்த வகைக்குள் கொள்வது என்ற கேள்வி எமக்கு எழுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பத்து மாதங்களுக் கும் அதிகமாகச் சபையில் எனக்கான பேச்சு நேரம் மறுதலிக்கப்பட்டு வருகின்றது. இது எனது சிறப்புரிமையை மீறலாகும்.

உறுப்பினர்களுக்கான நேர ஒதுக்கீட்டைச் சபாநாயகர் என்ற அடிப்படையில் தாங்கள் பெற் றுக்கொடுப்பதற்கு உரித்துடைவராகின்றீர்கள். சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேர ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்த வரலாறும் சபைக்கு உள்ளது. ஆகவே தாங்கள் எந்தவொரு கட்சியையும் சாராது நடுநிலைமையுடன் செயற்பட்டு வருகின்றவர் என்ற அடிப்படையில் இவ்விடயம் சம்பந்தமாக உரிய கவனம் எடுத்து விரைந்து பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்–என்றார். (ஐ-100)

## சாரண ஆசிரியர்களுக்கான ஆரம்பப் பயிற்சி நெறி யாழ். மத்தியல்லூரியில்

சாரண ஆசிரியர், குருளைச் சாரண ஆசிரியர்களுக்கான ஆதாரப் பயிற்சி நெறி யாழ. மத்திய கல்லூரியில் இன்று 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அறிமுகப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் ஆர்.தவகோபால் அறிவித்துள்ளார்.

## வெள்ளிவிழா

இலங்கை சமாதான நீதவான் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு விழா (வெள்ளி விழா) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை கொழும்பு – 01 இல் உள்ள Grand Oriental Hotel இல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இராஜாங்க நிதி அமைச்சர் இரான் விக்கிரமரத்தன கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார் என யாழ். மாவட்ட இணைப்பாளர் லயன் ஜெயசங்கர் அறியத் தந்துள்ளார்.

எனவே, பங்குகொள்ள விரும்பும் சமாதான நீதவான்கள், உறுப்பினராக சேர விரும்புபவர்கள் 0777110331 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கின்றார். (இ)

## மறவன்புலவு சச்சி விசாரணையில்

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அவரை விசாரணைக்காக கடந்த மாதம் 05ஆம் திகதி கொழும்புக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

தான் உடல் நல குறைவால் பாதிக்கப் பட்டு உள்ளார் எனவும், அதனால் கொழும்புக்கு வர முடியாது எனவும் கடிதம் மூலம் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினருக்கு அவர் அறிவித்து இருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நான்காம் குறுக்கு தெருவில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரின் அலுவலகத்திற்கு நேற்று வியாழக் கிழமை மறவன்புலவு சச்சிதானந்தம் அழைக்கப்பட்டார். அதிகாரிகள் வாக்குமூலம் பெற்று விசாரணைகளின் பின்னர் தன்னை விடுவித்துள்ளனர் என சச்சிதானந்தம் தெரிவுத்தார்.

## உலக உணவு தின விழா உரும்பிராயில்

“வளங்களைப் பாதுகாப்போம்; உணவுத்தன்னாதிக்கத்தைப் பேணுவோம்” என்ற தொனிப் பொருளில் உலக உணவு தின விழாவும் பயனாளிகளுக்குப் பயன் தரும் மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பலாலி வீதி, உரும்பிராய் காளியம்பாள் திருமண மண்டபத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.சிவனேசன் கலந்து கொள்வார்.

தேவை

பக்க வடிவமைப்பாளர்

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்துக்கு இரவு, பகல் கடமை புரியக்கூடிய பக்க வடிவமைப்பாளர்கள் தேவை.

☹ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

☹ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை kalaikkathirnews@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

தொலைபேசித் தொடர்புகளுக்கு - 0753153153.

காலைக்கதிர்

30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.



# சவால்களுக்கு மத்தியில் குடிதண்ணீர் விநியோகம்: பூநகரி பிரதேச செயலாளர்!

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் தொடர்ந்தும் பெரும் குடிதண்ணீர் பிரச்சினைகள் காணப்படுகின்றன என பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஷ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேசத்தின் வறட்சி நிலைமைகள் தொடர்பில் எஸ்.கிருஷ்னேந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பிரதேசமாக பூநகரி பிரதேசம் காணப்படுகிறது. இந்த பிரதேசத்தில் வருடம் முழுவதும் 11 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு குடிநீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இது தொடர்பாக எஸ்.கிருஷ்னேந்திரன் மேலும் தெரிவிக்கையில்–

பூநகரி பிரதேசத்தில் குடிதண்ணீருக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. தற்போது பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றினூடாக குடிதண்ணீர் விநி யோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும், பெரும் சவால்களுக்கு மத்தியில் நாள் ஒன்றுக்கு 2 லட்சம் லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பூநகரி பிரதேசத்தில் மக்களுக்கு தேவையான குடிதண்ணீரை பெற்றுக் கொள்வதற்கு உரிய கிணறுகள் மற்றும் நீர்நிலைகள் இல்லாத நிலை காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்து சமுத்திர மாநாட்டை ஜனாதிபதி ஆரம்பித்துவைத்தார்!



கொழும்பு, ஒக்.12

இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகளுக்கும் அச்சமுத்திரத்தை பெருமளவில் பயன்படுத்தும் நாடுகளுக்கும் பொதுவான எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கான தளமொன்றை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட 'எமது எதிர்காலத்தை வரைவிலக்கணப்படுத்தும் இந்து சமுத்திரம்' மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் அலரிமாளிகையில் ஆரம்பமானது.

இம்மாநாடு இன்றும் கொழும்பில் நடைபெறும். பூகோள வர்த்தகத்திலும் பொருளாதாரத்திலும் நேரடி தாக்கம் செலுத்தும் உலகின் மூன்றில் இரண்டு பங்கு அளவிலான எண்ணெய் கப்பல்களும் மூன்றிலொரு பங்கு அளவிலான சரக்கு கப்பல்களும் பயணம் செய்கின்ற மிக முக்கியமான கடல் மார்க்கமாக அமைந்துள்ள இந்து சமுத்திரம் உலகின் தீர்க்கமான வர்த்தக மார்க்கங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

இந்துசமுத்திரத்தை அண்மித்த நாடுகள் மற்றும் அதற்கு வெளியில் அமைந்துள்ள நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அதிதிகள், நிபுணர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றுவதுடன், இரண்டு நாள்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பிராந்தியத்தின் முக்கிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் பூகோள அமைவிடம் மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணக்கமாக செயற்பட்டு வருவது தொடர்பாக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாநாடு இலங்கையில் இடம்பெறுவது முக்கியமானதாகும் என்பதுடன், இலங்கையை பிராந்திய வர்த்தக சேவைகள் மற்றும் நிதி கேந்திர நிலையமாக மாற்றும் கொள்கை இம்மாநாட்டின் மூலம் மேலும் பலமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரின் சமுத்திரம் தொடர்பான விசேட பிரதிநிதி தூதுவர் பீட்டர் தொம்சன் இம்மாநாட்டில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சி தலைவர் ஆர்.சம்பந்தன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா மற்றும் உள்நாட்டு வெளி நாட்டு அதிதிகள் கலந்துகொண்டனர்.

# சீஷெல்ஸ் கடலில் கைதுசெய்யப்பட்ட சகல மீனவர்களும் விடுதலை



## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

சீஷெல்ஸ் ஜனாதிபதிக்கும் தனக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பெறுபேறாக சீஷெல்ஸ் நாட்டின் கடல் எல்லையில் மீன்பிடிக்கச் சென்றமையினால் கைதுசெய்யப்பட்ட சகல இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டுக்கு இணங்க மேற் குறிப்பிட்ட அனைத்து மீனவர்களும் நேற்று முந்தினம் மதியம் விடுவிக்கப்பட்டுள்ளனர் என நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'மிரிதியவருண – 2018' விருது வழங்கும் விழாவின்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

மீன்பிடித் துறையும் மீனவ சமூகமும் நாட்டிற்கு வலுசேர்க்கும் சக்தியாக இருக்கின்றன. அவர்களை பலவீனப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளாது.

மீன்பிடித் துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து பொறுப்புக்களும் குறைவின்றி நிறைவேற்றப்படும்.

மீன்பிடித் துறை மற்றும் மீனவ சமூகத்தின் நலனுக்காக கடந்த அரசுகளை விட பாரிய நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மீனவ சமூகத்திற்காக நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டத்தை மேலும் பலப்படுத்தவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# இந்தியாவில் தொழில்துறை பயிற்சிகளை நிறைவு செய்த இலங்கைப் பொலிஸார்!



கொழும்பு, ஒக்.12

இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 30 பேர்கள் கொண்ட ஓர் அணி இந்தியாவின் ஐதராபாத் நகரின் தேசிய தொழில்துறை ரீதியான பாதுகாப்பு அக்கடமியில் (NISA) தொழில்துறை ரீதியான ஒரு விரிவான பயிற்சியை நிறைவு செய்தனர்.

இந்தப் பயிற்சி நெறி கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை இடம்பெற்றது.


சர்வதேச தரம்வாய்ந்த இந்த அக்கடமி 1990 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அது தொழில்துறை ரீதியான பாதுகாப்பில் சிறந்த மையம் ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

NISA தொழில்துறை மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு பாதுகாப்பு முகாமைத்துவம் விமானப் பாதுகாப்பு அனர்த்த முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை உருவாக்குவதில் நன்கு பெயர் பெற்ற நிறுவனம் என்பதுடன் உயர்ந்த தரத்திலான உடல் மற்றும் உள ரீதியிலான திறன், ஆழ்ந்த அறிவு மற்றும் ஆற்றல்களுடன் தொழில்சார் தகைமை கொண்டவர்களை உருவாக்குவதற்கும் உதவியுள்ளது.

50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையுடனான அனுசரணையுடன் இந்தப் பயிற்சித் திட்டம் இந்திய நிதியுதவியில் இடம்பெற்றது.

பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர் மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஆகிய தரங்களையுடைய 30 உத்தியோகத்தர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சருடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்திப்பு



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு தாய்லாந்து சென்றுள்ளார்.

தாய்லாந்து அரசினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் இராஜாங்க அமைச்சர் அண்மையில் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

இராஜாங்க அமைச்சின் தூதுக்குழுவில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனில் சமரவீர மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இவ்விஜயத்தின்போது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தாய்லாந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் பிரதிப் பிரதம மந்திரியுமான ஜெனரல் பிரவிட் வுங்சுவொனை சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்தனது அழைப்பை ஏற்று தமது நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டமைக்கு தாய்லாந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

# மனிதவள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்!

கொழும்பு, ஒக்.12

இலங்கை மின்சார சபையின் ஆறாயிரம் மனிதவள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

சிலதொடர்பு அதிகாரிகளுக்கும் இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்றும் தகுதிஅடிப்படையில் பரீட்சையின் மூலம் ஆட்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதுஎனவும் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் பல மாகாணங்களில் 83 தொடர்பு ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இழுபடும் அரசமைப்பு உருவாக்கம்

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி 'சாண் ஏற முழம் சறுக்கிய' கதையாகத்தான் இருக்கிறது.

இதற்கான வழிகாட்டல் குழு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் சுமார் எண்பது தடவைகளுக்கு அதிகமாகக் கூடி ஆராய்ந்து விட்டது.

அது தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு உப குழுக்களும் தனித் தனியாக பல கூட்டங்களைக் கூட்டித் தத்தமது அறிக்கைகளையும் சமர்ப்பித்துவிட்டன.

வழிகாட்டல் குழுவுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்களும் தேவையான விடயங்களில் தமது போதுமான பங்களிப்பை அவ்வப்போது நிறைவாக வழங்கி வந்துள்ளனர்.

இவற்றின் பெறுபேறாக வழிகாட்டல் குழு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான தனது முயற்சியின் முக்கிய கட்டமாக, அது வரையான கலந்தாய்வுகளின் அடிப்படையிலான இடைக்கால அறிக்கை ஒன்றை முன்வைத்தது.

வழிகாட்டல் குழுவின் அந்த இடைக்கால அறிக்கையை புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பேரவையாக சுமார் ஒரு வாரம் கூடிய நாடாளுமன்றம் விவரமாக – விரிவாக – விவாதித்தது. பல கட்சியினரும், தரப்பினரும், தத்தமது கருத்துகளை விலாவாரியாக முன்வைத்தனர்.

இந்தக் கருத்துக்களை உள்வாங்கி, அவற்றின் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான ஒரு நகல் வடிவத்துக்குரிய அறிக்கையை வழிகாட்டல் குழு தயாரித்து, அரசமைப்பு உருவாக்கத்துக்கான பேரவையிடம் சமர்ப்பிப்பதுதான் இனிமேல் நடக்க வேண்டிய நிலுவைப் பணியாக இருந்தது.

ஆனால், அதுதான் 'சாண் ஏற முழம் சறுக்கிய' கதையாக இழுபடுகின்றது.

ஏற்கனவே இந்த அரசமைப்பு நகலுக்கான மாதிரி வடிவம் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதியைத்தான் வழங்குவதில் தாமதம் காணப்பட்டது.

அதுவும் கடந்த வாரம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிலையில் நேற்றுக் கடைசித் தடவையாக வழிகாட்டல் குழு கூடி அந்த நகல் வடிவத்துக்கான அறிக்கையை இறுதி செய்யும் என்றும் –

எதிர்வரும் 25 ஆம் திகதி அது புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பேரவையாகக் கூடுகின்ற நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, புதிய அரசமைப்புக்கான நகல் வடிவமாக அதனைத் தொடர்ந்து பரிசீலிப்பதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்படும் என்றும் – கூறப்பட்டது.

ஆனால், அது நடக்கவில்லை. மாறாக, 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரி திரும்பவும் பழைய விவகாரம் கிளறப்பட்டு நாள்கள் இழுத்தடிக்கப்படும் வேலையே தொடர்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக நாட்டின் ஆட்சி முறைமை எத்தகையது என்ற சர்ச்சை நீண்ட காலமாக இழுபறிப்பட்டுத் தொடர்கின்றது. 'ஏக்கிய ராஜ்ஜிய' எனச் சிங்களத்திலும், 'ஒருமித்த நாடு' எனத் தமிழிலும் குறிப்பிடுவதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவ அறிக்கையை இறுதி செய்வதற்காக நேற்று கூடிய வழிகாட்டல் குழு மீண்டும் இந்த 'ஏக்கிய ராஜ்ஜிய', 'ஒருமித்த நாடு' என்ற சர்ச்சைச் சிக்கலில் மாட்டிக் கொண்டு இழுபட்டது.

சிங்களத்தில் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்பது தமிழில் 'ஒற்றையாட்சி' என்பதையே குறிக்கும் என்றும், அப்படி இருக்கையில் அதனை 'ஒருமித்த நாடு' என்று எப்படித் தமிழில் குறிப்பிட முடியும் என்றும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. கிளப்பிய சர்ச்சையால், நேற்று அந்த அறிக்கையை புதிய அரசமைப்புக்கான நகல் வடிவ மாதிரியாக ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை வழிகாட்டல் குழுவில் ஒப்பேறவேயில்லை.

அதற்காக மீண்டும் எதிர்வரும்25 ஆம் திகதி வழிகாட்டல் குழு கூடப்போகின்றது. அன்று நடக்கவிருந்த புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பேரவையின் (நாடாளுமன்றத்தின்) கூட்டமும் அதனால் தள்ளிப்போயுள்ளது.

இனி, நவம்பர் 7 ஆம் திகதி வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று காலையில் அரசமைப்பு உருவாக்கப்பேரவையாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை 9 மணி முதல் 9.30 மணி வரை அரசமைப்பு உருவாகப் பேரவையாக நாடாளுமன்றம் கூடி, வழிகாட்டல் குழு சமர்ப்பிக்கும் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்துக்குரிய அறிக்கையைப் பரிசீலனைக்கு எடுக்கும். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நகலாக அதனை ஏற்று, அதனடிப்படையில் அந்தப் பேரவையிலும், அதற்கு வெளியிலும், பொது அரங்கிலும், பொது மக்கள் மத்தியிலும் கலந்துரையாடல்களையும், விவாதங்களையும், ஆய்வுகளையும் நடத்துவதா என்பதை அன்று அது தீர்மானிக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த அறிக்கை அரசமைப்புப் பேரவையில் நவம்பர் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டாலும், வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் முடிவடைந்த பின்னர், அடுத்த ஜனவரியில்தான் இந்த அறிக்கையை அரசமைப்புப் பேரவை விவாதித்துப் பரிசீலிக்கும் என்று கூறப்படுகிறது.

இப்படிக் காலம் இழுபடுகின்றமையைப் பார்த்தால் இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி இனி நொண்டிப் படுத்துக் கொள்ளும் என்றுதான் தோன்றுகின்றது.

# தமிழர்களின் பதவி உயர்வுகளை தடுக்கும் அவசியம் எமக்கில்லை

## சபையில் கூறினார் பிரதமர் ரணில்



கொழும்பு, ஒக். 12

தமிழர்களினதோ அல்லது தமிழ் பேசுபவர்களினதோ பதவியுயர்வுகளைத் தடுக்கவேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. அவ்வாறான பதவி உயர்வுகள் அதிகரிக்கப்படுவதையே விரும்புகின்றோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிர்வாக சேவை தரம் மூன்றுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்தப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து பேசும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மேலும் நிர்வாகசேவை தரம் மூன்றுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்போது வினாத்தாள் ஒன்று பரீட்சைக்கு முன்னர் வெளியானதாலேயே பெறுபேறுகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரத்துச்செய்யப்பட்ட பரீட்சை 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கான பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# நவ்று தீவில் தங்கியுள்ள அகதிகளை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுக

## சர்வதேச மருத்துவ தொண்டு நிறுவனம் கோரிக்கை

நவ்று, ஒக். 12

நவ்று தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட அகதிகளை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மருத்துவ தொண்டு நிறுவனமான எம்.எஸ்.எவ். இந்தக்கோரிக்கையைவிடுத்துள்ளது.

எம்.எஸ்.எவ். தொண்டு நிறுவனம் கடந்த 11 மாதங்களாக ஆஸ்திரேலியாவிலுள்ள அகதிகள் முகாமில் பணிகளை மேற்கொண்டது.

எனினும், நவ்று அதிகாரிகளால் அந்தத் தொண்டு நிறுவனம் வெளியேற்றப்பட்டது.

தாம் பணியாற்றிய இந்த காலப்பகுதிக்குள் மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது தற்கொலை செய்துக் கொள்ள முயன்ற 28 பேருக்கு மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளதாக எம்.எஸ்.எவ். நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் மனநிலை பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் இந்த அகதிகள் முகாமை மூடி அங்குள்ளவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுமாறு எம்.எஸ்.எவ். நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் இந்த கோரிக்கைக்கு நவ்று அதிகாரிகளோ அல்லது ஆஸ்திரேலிய அதிகாரிகளோ இதுவரை எந்தவித பதில்களையும் வழங்கவில்லை.

நவ்று தீவில் 100 சிறுவர்கள் உள்ளிட்ட 900 க்கும் மேற்பட்ட அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன மீனவர் நேற்றுச் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 12

மீன்பிடிக்காக வாகரைப் பிரதேசத்தையொட்டிய வங்காளக் கடலுக்குச்சென்றிருந்த வேளையில் படகிலிருந்து தவறி கடலுக்குள் விழுந்த மீனவரைத் தேடும் பணி4ஆவதுநாளாகத்தொடர்ந்த வேளை நேற்று அவரது சடலம் ஆழ்கடல் பகுதியில் மிதந்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை – புளியங்கண்டலடி கிராமத்தைச் சேர்ந்த 37 வயதான கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை கடந்த திங்கட்கிழமை இரவு 08 ஆம் திகதி மீன் பிடிக்காக கடலுக்குச் சென்றிருந்த சமயம் படகிலிருந்து தவறி கடலில் விழுந்து காணாமல் போயிருந்தார்.

இது குறித்து பிரதேச மீனவர்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேடுதல் இடம்பெற்று வந்தது.

இதனையடுத்து நேற்று கண்டுபிடிக்கப்பட்ட அவரது சடலம் வாகரைப் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் வாகரைப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

# மகளிர் பாடசாலை அதிபரை முழந்தாளிட வைத்த வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 12

பெண் அதிபரை முழந்தாளிடச்செய்த விவகாரம் தொடர்பில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர திசாநாயக்கா உட்பட 23 பிரதிவாதிகள் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில் அந்த வழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பதுளை தமிழ் மகளிர் பாடசாலை அதிபர் பவானியை முழந்தாளிடச் செய்த விவகாரம் தொடர்பானவழக்குநேற்றுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் தரப்பிலிருந்து சந்தேக நபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்ட 23 பேரும்மன்றில்ஆஜராகவில்லை. முதலமைச்சர் சாமர சம்பத் திசாநாயக்கவின் சட்டத்தரணியால் பிரதிநிதிவாதிகளின் தரப்பினர் ஆஜராவதற்குக் கால அவகாசம் கோரப்பட்டது.

இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஒக். 12

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த பல ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை இம்மாதம் 20ஆம், 21ஆம் (சனி,ஞாயிறு) திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பி.ப 2.30 மணிவரை இல.286, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிநெறியில் பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் இம் மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (ஐ)

## நாளை

13.10.2018
சனிக்கிழமை

நட்சத்திரம்: அனுசம் 2.42 வரை
திதி : சதுர்த்தி மு.ப. 8.02 வரை
சுபநேரம் : 3.02 – 4.32 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32 வரை

# ஞானசார தேரரின் விடுதலையை வலியுறுத்தி பொதுபல சேனா அமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக்.12

ஞானசார தேரரின் விடுதலையை வலியுறுத்தி பொதுபல சேனா அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

ஞானசாரதேரர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை முன்வைக்கவில்லை. ஜனாதிபதி இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு விரைவில் அவரை விடுதலை செய்ய வேண்டும்.

தேரர் அன்று நீதிமன்றத்தில் இராணுவ புலனாய்வு அதிகாரிகளை சிறை வைப்பதற்கு எதிராகவே கருத்து தெரிவித்தார்.

கருத்துக்களைத்தெரிவித்ததன் பின்னர் தான் தெரிவித்த கருத்துக்களில் ஏதேனும் தவறுகள் காணப்பட்டால் மன்னிக்குமாறும்



ஞானசார தேரர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பொய் சாட்சிகளை தெரிவித்தே ஞானசார தேரரை கைது செய்து சிறை வைத்துள்ளனர்.

ஆகவே, இது தொடர்பில் நாட்டின் தலைவரான நீங்கள் கவனம் செலுத்துவதோடு தாங்கள் நேரடியாக தலையிட்டு ஞானசார தேரரை விரைவில் விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆள்கடத்தல் முறியடிப்பு இணைய மூலமான பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு!



கொழும்பு, ஒக்.12

ஆள்கடத்தலுக்கு எதிராக போராடுதல் தொடர்பில் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களில் இணைந்துள்ள உத்தியோகத்தர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இணையம் மூலமான பயிற்சி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமைஇடம் பெற்றது.

குடியேற்றங்கள் பற்றிய சர்வதேச அமைப்பால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட இந்த பாடநெறியானது பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்தின் இலத்திரனியல் பயிற்சி பிரிவின் ஒரு பாகமாக அமைந்துள்ளது. இந்த முன்னெடுப்புக்கான நிதி உதவியை ஆஸ்திரேலிய அரசு வழங்கியுள்ளது.

இந்த பாடநெறியை ஆரம்பிக்கும் நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் உரையாற்றுகையில்–

ஆள்கடத்தல் என்பது 'பொது மனிதகுலம் பற்றிய எமது உணர்வின் ஒரு வடுவாகும் என்பதுடன் மனிதர்களுக்கான ஓர் அநீதியும் ஆகும்.

ஆள்கடத்தலானது மக்களின் ஆரோக்கியத்தை ஆபத்துக்கு உட்படுத்துவதுடன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் மற்றும் பல குற்றச்செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளது.

ஆள்கடத்தலை முறியடித்தல் பற்றிய ஆரம்ப செயற்பாடுகளானவை ஆள்கடத்தல் மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்களை கண்டுபிடிக்கும் திறமையுடன் இருப்பதில் தங்கியுள்ளது.

இந்த வகையில், இந்த பாடநெறியானது, ஆள்கடத்தலுக்கு உட்படும் சாத்தியமுள்ளவர்களை இனங்காணல், அவர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் தொடர்பில் வெளிநாட்டில் நிலைகொண்டுள்ள உத்தியோகத்தர்களை முறையாக தயார்நிலையில் வைப்பதற்கான உதவியை அவர்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆள்கடத்தலுக்கு உட்படும் சாத்தியமுள்ளவர்கள் அதனை எதிர்கொள்ளும்வேளையில், அவர்களைவினைத்திறனாகவும் உணர்வுபூர்வமாகவும் கையாள்வதற்கான அடிப்படைதிறன்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த பயிற்சி வழியமைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## விவசாய விரிவாக்கல் தொழிநுட்ப உதவியாளர்கள் 65 பேர் நியமனம்



மட்டக்களப்பு, ஒக்.12

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் விவசாய விரிவாக்கல் தொழிநுட்ப உதவியாளர்கள் 65 பேருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை உவர்மலை விவேகனந்தாக் கல்லூரியில் நேற்று முந்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நியமனங்கள், போட்டிப் பரீட்சை மூலம் நியமனதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு தகுதியானவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய வழங்கப்படுகின்றன.

கிழக்கு மாகாண சபையில் வெற்றிடமாக உள்ள பதவிகள் வெகு விரைவில் கட்டம் கட்டமாக வழங்கப்படும் என்றும் கிடைக்கப்பெறுகின்ற அரச நியமனத்தை பயன்படுத்தி மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முன்னின்றுசெயற்பட வேண்டும் என்று இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம்.எஸ்.அபேகுணவர்தன, கிழக்குமாகாணவிவசாயஅமைச்சின் செயலாளர் கே.சிவநாதன் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தங்க பிஸ்கட்டுகளை கடத்திய பெண் உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஒக்.12

சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை தங்கபிஸ்கட்களை இலங்கைக்கு கடத்திவர முற்பட்ட இலங்கை பிரஜைகள் மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

50 வயதான மற்றும் 46 வயதான மற்றும் 56 வயதான இலங்கை பிரஜைகளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் வத்தளை, மாபோல மற்றும் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரிகள் ஆவர்.

இந்த நபர்கள் நேற்றுக் காலை சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க



விமான நிலையத்திற்கு வந்த போது சந்தேக நபர்களின் பயண பையில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகை தங்க பிஸ்கட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நபர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவர்களை சோதனையிட்டபோது மாபோல பிரதேசத்தைச் சேர்ந்த நபரிடமிருந்து 1.1 கிலோகிராம் எடையுடைய 71 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெருமதியான 11 தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கைது செய்யப்பட்ட கோட்டை பிரதேசத்தை சேர்ந்த பெண்ணிடமிருந்து 300 கிராம் எடையுடைய 17 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியுடைய மூன்று தங்க பிஸ்கட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என சுங்க ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விருவருக்கும் முறையே 5 லட்சம் மற்றும் 20 ஆயிரம் ரூபா அபாராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை பண்டாரநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்து சமுத்திரம் பொது மரபுரிமை சொத்தாகும் என்கிறார் பிரதமர்!



இந்து சமுத்திரம் பொது மரபுரிமைச் சொத்தாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

உலகின் மூன்றில் இரண்டு பகுதி எண்ணெய்க் கப்பல்களும், மூன்றில் ஒரு பகுதி சரக்குக் கப்பல்களும் இந்து சமுத்திரத்தின் ஊடாக பயணிக்கின்றன.

இதன் பொருளாதார நன்மைகளை அடைந்துகொள்ள அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதமர் வலியுறுத்தினார்.

அலரிமாளிகையில்நேற்று ஆரம்பமான இந்து சமுத்திரம் தொடர்பான மாநாட்டில் பிரதமர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு!

திருமலை, ஒக்.12

திருகோணமலை மாவட்ட செயலக நலன்புரிச்சங்கத்தால் வருடா வருடம் ஏற்பாடுசெய்யப்படுகின்ற இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வு மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் வழிகாட்டுதலின்கீழ்நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம்.கலைஞானசுந்தரம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பப்புவா நியூ கினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!

## சுனாமி எச்சரிக்கை விடுப்பு

போர்ட் மோர்ஸ்பை, ஒக்.12

பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியாவின் போர்கேரா மாகாணத்தில் நேற்று சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள் ளது.




பிரிட்டனின் கிம்பே தீவில் இருந்து கிழக்கே 125 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இடத்தை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் ராட்ச அலைகள் ஏற்பட்டதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சேதங்கள் குறித்து இன்னும் தகவல் வெளியாகவில்லை.

# இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

## ரிச்டர் அளவில் 6.0 ஆக பதிவு

ஜகர்த்தா, ஒக்.12

இயற்கை பேரழிவுகளால் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ள இந்தோனேஷியாவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவை சமீபத்தில் நிலநடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவில் 7.5 ஆக பதிவான அந்த பயங்கர நிலநடுக்கத்தால், 170 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டு பலு, டோங்கலா பகுதிகளில் சுனாமி தாக்கியது.

இந்த இயற்கை பேரழிவுகளால் இந்தோனேசியாவில் இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். மேலும், பல கோடி மதிப்பிலான சேதம் ஏற்பட்டது. இயற்கையின் இந்த கோர தாண்டவத்தில் இருந்து அந்நாடு மீண்டு வருவதற்குள் அங்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள் ளது.

# கென்யாவில் பஸ் கவிழ்ந்து விபத்து: 50 பேர் பரிதாப பலி!



நைரோபி, ஒக்.12

கென்யாவில் பஸ் கவிழ்ந்து விழுந்த விபத்தில் 50 பேர் பரிதா பமாக பலியாகினர் என அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

கென்யா தலைநகர் நைரோபி யில் இருந்து மேற்கு பகுதியில் உள்ள காகமேகா நோக்கி பஸ் ஒன்று நேற்று உள்ளூர் நேரப்படி அதிகாலை 1 மணிக்கு சென்று கொண்டிருந்தது. இதில் 52க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

அந்த பஸ் கெரிச்சோ கவுண்டி பகுதியில் சென்றபொழுது வீதி யில் திரும்பியபோது திடீரென கவிழ்ந்து பள்ளத்தில் விழுந்து விபத்திற்கு உள்ளானது. இந்த விபத்தில் 50 பேர் பலியாகினர். பஸ் மேற்கூரை உடைந்து நொருங்கியது.

தகவல் அறிந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து சென்றனர். விபத்தில் பலியானவர் களின் உடல்களை மீட்டு மருத்து வமனைக்கு அனுப்பியுள்ளனர். காயமடைந்தவர்களை மீட்டு அரு கிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் கென்யா வில் வீதி விபத்துகளில் 3 ஆயிரம் பேர் பலியாகின்றனர். இந்த எண்ணிக்கை 12 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித் துள்ளது.

# தேர்தல் தோல்வியை எதிர்த்து மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி வழக்கு தாக்கல்

மாலே, ஒக்.12

மாலைதீவின் புதிய ஜனாதிபதி யாக பொறுப்பேற்கவுள்ள முஹம் மது சோலியின் தேர்தல் வெற் றிக்கு எதிராக முன்னாள் ஜனாதி பதி அப்துல்லா யாமீன் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தொடரப்பட்டது.

இந்திய பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மாலைதீவில் கடந்த செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெற்றது.

மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம்



தோல்வியடைந்தார்.

58.4 சதவீதம் வாக்குகளை பெற்ற முஹம்மது சோலி வெற்றி பெற்றார் என தேர்தல் ஆணையகம் அறிவித்தது. இதனால், மாலை தீவின் புதிய ஜனாதிபதியாக இப்ராகிம் முகமது சோலி எதிர் வரும் நவம்பர் 17 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில், புதிய ஜனாதி பதியாக பொறுப்பேற்கவுள்ள முஹம்மது சோலியின் தேர்தல் வெற்றிக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தொடரப்பட்டது.

வாக்குப்பதிவின்போது நிகழ்ந்த வன்முறை சம்பவங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கையில் நடந்த குளறுபடி காரணமாக முஹம்மது சோலி 58.4 சதவீதம் வாக்குகளை பெற்றார் என அறிவித்த தேர்தல் ஆணையகம் உத்தரவுக்கு எதி ராக இந்த வழக்கு தொடரப்பட் டுள்ளது என யாமீன் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்துள் ளனர்.

# 5 லட்சம் பேரின் தகவல்கள் திருட்டு; கூகுள் பிளஸ் வலைத்தளத்தை மூட முடிவு

சான்பிரான்சிஸ்கோ:, ஒக்.12

5 லட்சத்துக்கும் அதிகமானோ ரின் அந்தரங்க தகவல்கள் திரு டப்பட்டுள்ளதால் கூகுள் பிளஸ் சமூக வலைத்தளம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'கூகுள்' தேடல் இணையதளம், தமிழரான சுந்தர்பிச்சை தலை மையில் இயங்குகிறது.

இந்த இணையதளத்தின் ஒரு அங்கம் 'கூகுள் பிளஸ்' சமூக வலைத்தளம். இது 201ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ஆம் திகதி தொடங்கப்பட்டது. ஆனால் 'பேஸ் புக்' சமூக வலைத்தளத் தின் வளர்ச்சியுடன் ஈடுகொடுக்க முடியாத நிலையில் இருந்து வந்தது.

இந்த நிலையில் தற்போது 'கூகுள் பிளஸ்' சமூக வலைத்தள உபயோகிப்பாளர்கள் 5 லட்சத்துக் கும் அதிகமானோரின் அந்தரங்க தகவல்கள் திருடப்பட்டுள்ளன என தகவல் வெளியாகி பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இதையடுத்து 'கூகுள் பிளஸ்' சமூக வலைத்தளம் மூடப்படும்




என அறிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் உடனடியாக மூடப்பட்டு விடாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது பற்றி அந்த சமூக வலைத்தள நிறுவனத்தின் துணைத்தலைவர் பென் ஸ்மித் கூறுகையில்–

உபயோகிப்பாளர்களின் பரி மாற்றத்துக்கு தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு, 10 மாத காலத்தில் கூகுள் பிளஸ் மூடப்படும் என்று குறிப்பிட்டார்.

"பேஸ் புக் சமூக வலைத்தள நிறுவனமும், தனது உபயோகிப் பாளர்களின் அந்தரங்க தகவல் கள் திருட்டு போனமையால் சர்ச்சை யில் சிக்கி இருப்பது குறிப்பிடத் தக்கது.

# தம்பி ஷாபாஸ் ஷெரிப் கைது; இம்ரான்கான் மீது நவாஸ் குற்றச்சாட்டு!

லாகூர், ஒக்.12

ஷாபாஸ் ஷெரிப் பிரதமர் இம் ரான் கானின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இது எதிர்க்கட்சியினரை பழிவாங்கும் நடவடிக்கை என்று நவாஸ் ஷெரிப் குற்றம்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் தம்பி ஷாபாஸ் ஷரிப். இவர் பஞ்சாப் மாகாணத் தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார். நவாஸ் ஷெரிப் சிறை தண்டனை பெற்றபின் பாகிஸ் தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவராக இருக் கிறார்.

இவர் பஞ்சாப் மாகாண முதலமைச்சராக இருந்த போது வீட்டு வசதி வாரிய ஊழலில் ஈடுபட்டார் என கூறி சமீபத்தில்



அவர் கைது செய்யப்பட்டார். இது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியினரிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே பிணையில் விடுதலை ஆன நவாஸ் ஷெரிப் தனது கட்சியின் மத்திய செய லாக்க கமிட்டியின் அவசர கூட்டத்தை லாகூரில் கூட்டினார், அப்போது பேசிய அவர் பிரதமர் இம்ரான் கானின் உத்தரவின் பேரில் ஷாபாஸ் ஷெரிப் கைது செய்யப்பட்டுள்ளார். இது எதிர்க் கட்சியினரை பழிவாங்கும் நடவடிக்கை என்று தெரிவித் துள்ளார்.

மேலும் பேசிய அவர் கட்சியின் எம்.பி.க்கள் எதிர்க்கட்சியினரை சந்தித்து இம்ரான்கானின் அடக்கு முறை நடவடிக்கையை எடுத்து ரைக்க வேண்டும்.

அதற்கு எதிராக போராட அவர்களையும் அழைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும் இம்ரான்கான் அரசுக்கு எதிராக தமது பாகிஸ்தான் முஸ்லிம்லீக் (நவாஸ்) கட்சியின் போராட்டத்தை தொடங்கி வைத் தார். அப்போது ஷாபாஸ் ஷெ- ரிப்பை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

# கருக்கலைப்பு ஆள்வைத்து கொலை செய்வதற்கு ஒப்பானது: பாப்பரசர்

வத்திகான் சிட்டி, ஒக்.12

வயிற்றில் வளரும் சிசுக்களை கருக்கலைப்பு செய்வது ஆள் வைத்து கொலை செய்யும் குற்றத்துக்கு ஒப்பானதாகும் என பாப்பரசர் பிரான்சிஸ் குறிப் பிட்டுள்ளார்.

இத்தாலி நாட்டில் உள்ள வத் திக்கான் அரண்மனையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மதகுருவான பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முந்தினம்



பக்தர்களிடையே தோன்றி சொற்பொழிவாற்றினார்.

வயிற்றில் வளரும் சிசுக்களை கருக்கலைப்பு செய்வது இன் னொருவரை கொல்வதைப் போன்ற குற்றச்செயலாகும். ஒரு மனித உயிரிடம் இருந்து விடுபடு வது என்பது, ஒரு பிரச்சனையை தீர்ப்பதற்கு மற்றவரை ஆள் வைத்து கொல்வதைப் போன்ற தாகும் என அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் இடைக்கால அறிக்கை வெளியிட வேண்டும்

## சசிகலா தரப்பு வலியுறுத்தல்



சென்னை, ஒக்.12

இதுவரை நடந்த விசாரணை அடிப்படையில் ஜெயலலிதா மரணம் குறித்து இடைக்கால அறிக்கையை ஆணையம் வெளியிட வேண்டும் என்று சசிகலா தரப்பு வழக்கறிஞர் வலியுறுத்தி உள்ளார்.

ஜெயலலிதா மரணம் குறித்து ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரித்து வருகிறது.

கடந்த 22.9.2016 அன்று இரவு ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை அளித்த மருத்துவர்களில் ஒருவரான இருதய நோய் தடுப்பு சிறப்பு மருத்துவர் சத்தியமூர்த்தி நேற்று முன்தினம் ஆணையத்தில் ஆஜரானார்.

அப்போது அவர், '22.9.2016 அன்று இரவு 9.45 மணிக்கு முதலமைச்சர் ஜெயலலிதா இருதய நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வர இருப்பதாகவும், உடனடியாக மருத்துவமனைக்கு புறப்பட்டு வருமாறு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு மேலாளர் எனக்கு தகவல் தெரிவித்தார்.

உடனடியாக நான் ஆழ்வார்பேட்டையில் உள்ள வீட்டில் இருந்து புறப்பட்டு மருத்துவமனைக்கு வந்தேன். நான் மருத்துவமனைக்கு வந்த பின்னர் தான் ஜெயலலிதாவை ஏற்றி வந்த அம்புலன்ஸ் மருத்துவமனை வந்து சேர்ந்தது.

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது அவருக்கு ரத்த அழுத்தம் ஏற்ற, இறக்கமாக இருந்தது. தற்காலிகமாக அவருக்கு இதய துடிப்பை சீராக்க பேஸ் மேக்கர் பொருத்தினோம்' என்று சாட்சியம் அளித்தார்.

ஜெயலலிதாவுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்ட தகவல் அப்பலோ மருத்துவமனைக்கு 22.9.2016 அன்று இரவு 10 மணிக்கு தான் தெரிவிக்கப்பட்டது என்று அப்பலோ மருத்துவர்கள், அம்புலன்ஸ் டிரைவர் ஆகியோர் ஏற்கனவே ஆணையத்தில் சாட்சியம் அளித்துள்ள நிலையில், மருத்துவர் சத்தியமூர்த்தி இரவு 9.45 மணிக்கு தனக்கு தகவல் சொல்லப்பட்டதாக சாட்சியம் அளித்தது குறித்து சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜா செந்தூர் பாண்டியன் அவரிடம் குறுக்கு விசாரணை செய்தார்.

அதற்கு மருத்துவர் சத்தியமூர்த்தி, உத்தேசமாக இரவு 9.45 மணி இருக்கும் என்றும், அது தான் மிகச்சரியான நேரம் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்தார்.

உடனே கோபம் அடைந்த நீதிபதி ஆறுமுகசாமி, ஏன் முன்னுக்கு பின் முரணாக பதில் அளிக்கிறீர்கள்? என்று கேள்வி எழுப்பினார். மருத்துவர் சத்தியமூர்த்தியிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணை நடந்தது.

விசாரணை முடிவடைந்து வெளியே வந்த சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜா செந்தூர் பாண்டியன் கூறும்போது–

'22.9.2016 அன்று ஜெயலலிதா அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் 4.12.2016 அன்று ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டது வரை என்ன நடந்தது என்பதை அப்பலோ மருத்துவர்கள் வாக்குமூலமாக ஆணையத்தில் பதிவு செய்துள்ளனர். இதுவரை நடந்த விசாரணை அடிப்படையில் ஆணையமே இடைக்கால அறிக்கை வெளியிட்டால் சரியாக இருக்கும்.

ஜெயலலிதா சிகிச்சையில் இருந்தபோது பழச்சாறு குடிப்பது போன்ற வீடியோ பதிவை வெற்றிவேல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வீடியோ பதிவு இதுவரை ஆணையத்தால் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

அந்த வீடியோவை தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி அது உண்மையானதா போலியானதா என்பதை கண்டறிந்து அதையும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிகளை ஒன்று சேர்க்க முயற்சிக்கிறார் மம்தா பானர்ஜி

புதுடில்லி, ஒக்.12

கர்நாடக முதல்வராக குமாரசாமி பதவியேற்ற போது, அந்த விழாவில் எதிர்க்கட்சி தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் அனைவரும் ஒற்றுமையாக இருந்து மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைத்து பா.ஜ.கவை தோற்கடிப்பது என முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்த நிலையில் அடுத்த மாதம் சத்தீஸ்கர், மத்தியபிரதேஷ், ராஜஸ்தான் தேர்தல் அறிவிப்பு வெளியானது.

இதற்கு சற்று முன்னதாக பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி மற்றும் சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் ஆகிய இருவரும் காங்கிரஸுடன் இணையாமல்



தனித்து போட்டியிடுவதாக அறிவித்தனர்.

இதே நிலை மக்களவைத் தேர்தலிலும் நீடித்தால் பா.ஜ.கவின் வெற்றி உறுதியாகிவிடும் என அஞ்சப்படுகிறது. இதை முறியடிக்க மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

கொல்கத்தாவின் பிரிகேட் பரேட் மைதானத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி 19 இல் திரிணமூல் காங்கிரஸின் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கலந்துகொள்ள அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் மம்தா அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து 'இந்து தமிழ்' நாளேட்டிடம் திரிணமூல் காங்கிரஸின் எம்பிக்கள் வட்டாரம் கூறும்போது–

'மக்களவை தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் பிரிவதை எங்கள் தலைவர் விரும்பவில்லை. இதனால், அவர்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் அவர் இறங்க உள்ளார்' எனத் தெரிவித்தனர்.

# வெள்ளைப் புலியை தத்தெடுத்தார் சிவா!





சென்னை, ஒக்.12

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் உள்ள அனு என்ற வெள்ளைப் புலியை நடிகர் சிவகார்த்திகேயன் 6 மாதங்களுக்கு தத்தெடுத்துள்ளார்.

இதுகுறித்து பூங்கா நிர்வாகம் கூறும்போது–

வண்டலூர் அறிஞர் அண்ணா பூங்காவில் பராமரிக்கப்படும் விலங்குகளை பொதுமக்கள் தத்தெடுத்து பராமரிக்கும் திட்டம் 2009 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி பூங்காவிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகளை பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் தத்தெடுக்கலாம்.

அந்தவகையில், நடிகர் சிவகார்த்திகேயன் பூங்காவிலுள்ள அனு என்ற வெள்ளைப் புலியின் பராமரிப்புக்காக சுமார் ரூ. 2 லட்சத்தை வழங்கி அதனை ஆறு மாதம் தத்தெடுப்பதாக தெரிவித்திருக்கிறார் என்று தெரிவித்துள்ளது.

வெள்ளைப் புலியைத் தத்தெடுத்தமை குறித்து நடிகர் சிவகார்த்திகேயன் கூறும்போது–

வனவிலங்குகளுக்கான அச்சுறுத்தல்களிலிருந்து அவற்றைப் பாதுகாப்பது நமது கடமை. எனவே பொதுமக்கள் விலங்குகளைத் தத்தெடுக்க முன்வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதா பயன்படுத்திய ஹெலியை விற்பதற்கு தமிழக அரசு முடிவு!



மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பயன்படுத்தி வந்த ஹெலிகொப்டரை விற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி மாநில வணிக நிறுவனத்துக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பயணத்துக்காக கடந்த 2006 ஆம் ஆண்டு நவீன ஹெலிகொப்டர் ஒன்று வாங்கப்பட்டது.

ஜெயலலிதா முதல்வராக இருந்த கால கட்டங்களில் பல தடவை அந்த ஹெலிகொப்டரை பயன்படுத்தி உள்ளார். அவர் மரணத்துக்கு பிறகும் அந்த ஹெலிகொப்டர் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது அந்த ஹெலிகொப்டர் சென்னை விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்த ஹெலிகொப்டரை பழுது பார்த்து பயன்படுத்துவதற்கு அதிக செலவாகும் என்பதால் அந்த ஹெலிகொப்டரை விற்பனை செய்து விட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் படி மாநில வணிக நிறுவனத்துக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ள நிலையில் நிர்மலா சீதாராமன் பிரான்ஸ் செல்வது எதற்காக?

## – ராகுல் கேள்வி

புதுடில்லி, ஒக்.12

உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ள நிலையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பிரான்ஸ் செல்வது எதற்காக என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமனின் 3 நாள் பிரான்ஸ் பயணத்தை, ரபேல் போர் விமானம் வாங்குவதுடன் தொடர்பு படுத்தி காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தனது டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்–

ரபேல் போர் விமானம் வாங்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட



முடிவுகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி மத்திய அரசை உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரான்ஸ் நாட்டுக்கு பயணம் மேற் கொள்வதற்கான காரணம் உண்மையில் மிகவும் எளிமையானது.

பிரதமர்தான் இதில் முடிவெடுத்தார். எனவே நீதிமன்றம் கேட்டுள்ள விளக்கங்களுக்கு இனிமேல்தான் காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும்.

ஆனால், அதற்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. பிரதமரின் முடிவை நியாயப்படுத்தவே பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரான்ஸ் நாட்டுக்கு புறப்பட்டுச் செல்கிறார்' என்று குறிப்பிட்டு உள்ளார்.

நிர்மலா சீதாராமன் தனது பிரான்ஸ் பயணத்தின்போது அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் புளோரன்ஸ் பார்லியை சந்தித்து பேசுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜயகலாவின் கைதும் பிணையும் நாடகமா?



இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராகப்பதவிவகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூலை மாதம் 2 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை அரசாங்கத்தின் நிகழ்வொன்றின்போது விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக வேண்டும் எனகூறியிருந்தார். இதனால் இலங்கைக் குற்றப்புலனாய்வுப் பிரிவிவு நடத்திய பல கட்ட விசாரணைகளின் பின்னர் கடந்த திங்கட்கிழமை முற்பகல் கைதுசெய்யப்பட்டார். இந்த விவகாரம் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக இலங்கைப் பொலிஸ் திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு சட்டத்தரணிகளுடன் சென்றிருந்தார். அங்கு வாக்குமூலம் வழங்கியபோதே அவர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், கொழும்பு புதுக்கடை பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

விஜயகலா மகேஸ்வரனை விடுவிப்பதற்கு இலங்கைப் பொலிஸார் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காத நிலையில், அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ள துடன் இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை அரசாங்க நிகழ்வின்போது, இலங்கை அமைச்சர்கள் முன்னிலையிலேயே, விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தியிருந்தார்.



இதனால் கொழும்பு அரசியலில் பெரும் பதற்றமும் விஜயகலா மீது சந்தேகமும் ஏற்பட்டது.

உடனடியாக அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய கூட்டு எதிர்க்கட்சி உள்ளிட்ட சிங்களக் கட்சிகள் அனைத்தும் மைத்திரி – ரணில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்திருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கியதேசியக் கட்சி ஆகியவற்றின் அமைச்சர்களும் விஜயகலா மீது தமது விசனத்தை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து விஜயகலா தாமாகவே முன்வந்து தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகினார். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழுவும் இது தொடர்பில் ஆராய விசாரணைக் குழுவொன்றை அமைத்திருந்தது.

இலங்கை நாடாளுமன்ற சபாநாயகா கரு ஜயசூரியவும் நடாளுமன்ற சிறப்புக் குழுவொன்றை அமைத்து விசாரணை நடத்தினார்.

## தேர்தலில் வாக்கு அபகரிக்கும் சூழ்ச்சி என்கின்றன தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள்

அதன் பின்னர் விஜயகலாவின் உரை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்குச் சென்றபோது அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆனால், எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலை மையமாக வைத்து, ஐக்கியதேசியக் கட்சி நடத்திய நாடகமே விஜயகலா மகேஸ்வரன் கைதான விவகாரம் என தமிழ் அரசியல் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

### ஐ.தே.கவின் தந்திரமா?

புலிகளுக்கு ஆதரவாக யார் பேசினாலும் கைது செய்யப்படுவார்கள் என்பதை தென்பகுதி சிங்கள மக்களுக்குக் காண்பித்து, புலி எதிர்ப்புப் பிரசாரத்தின் மூலம் சிங்கள பௌத்த பேரினவாத வாக்குகளை பெற்றுக்கொள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சி என்றும் தமிழ்க் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, புலிகளுக்கு ஆதரவாகப் பேசி கைது செய்யப்பட்டதாகக் கூறி விஜயகலாவும் வடமாகாணத்தில் பிரசாரம் செய்து, வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முற்படுவார்.

ஆகவே தமிழ் மக்களின் வாக்குகளை ஐக்கியதேசியக் கட்சிக்கு விஜயகலா மூலமாகப் பெற்றுக் கொள்ளவும் இந்தக் கைது விவகாரத்தை ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தியுள்ளார் என்றும் தமிழரசுக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

உண்மையில் தனது உரையில் தமிழ் மக்களுக்காகவே பேசியிருந்தால், விஜயகலா மகேஸ்வரன் ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து விலகி, தமிழ் கட்சி ஒன்றில் இணைந்திருக்க வேண்டும். அல்லது முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் இணைந்தாவது செயற்பட்டிருக்க வேண்டும்.

### சிங்களக் கட்சியின் மீது விஜயகலாவின் விசுவாசம்

ஆனால் அவர் இதுவரை கட்சியில் இருந்து விலகவில்லை. அமைச்சுப் பதவியில் இருந்து விலகினாலும் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இன்று வரை விலகவில்லை.

இதனால் அவர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே விசுவாசமாகச் செயற்படவுள்ளார் என்று தெரிகின்றது.

புலிகள் பற்றிப் பேசியமையையும் அதனால் விசாரணைக்கு உள்ளாகி கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையான சம்பவங்கள் அனைத்தையுமே, விஜயகலா, தமிழ் மக்களுக்குச் செய்த பெரும் தியாகமாகக் காண்பித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய வடமாகாணத்துக்கான வாக்குகளை அதிகரிக்கத் திட்டதிட்ட மிட்டுள்ளார் என்று தமிழ்த் தரப்புக்கள் குற்றம் சுமத்துகின்றன.

இதுதான் கைது செய்யப்பட்டு பினையில் விடுவிக்கப்பட்டதான் உண்மைக் கதை என்று இடதுசாரி முன்னணியின் மூத்த உறுப்பினர் ஒருவர் கூர்மைச் செய்தித் தளத்திற்குத் தெரிவித்தார்.

இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்தின் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கூறிய கருத்து, முன் சிந்தனையில்லாத தனிப்பட்ட அரசியல் நோக்கம் கொண்டது என்பதை தென்னிலங்கையில் உள்ள சில பிரதான சிங்கள அரசியல்வாதிகளுக்குப் புரியும்.

ஆனாலும் இது சிங்கள பௌத்த நாடு என்பதைக் காண்பிக்கும் நோக்கில் விஜயகலா மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என பௌத்த பிக்குமார் கூட அப்போது கூறியிருந்தனர்.

அரசியல் கட்சிகளின் ஆதரவுகள் இன்றி போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்கள், போரினால் ஏற்பட்ட பக்க விளைவுகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி, 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் ஜனநாயக வழியில் போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், சிங்களப் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்த விஜயகலா மகேஸ்வரன், 30 வருட ஆயுதப் போராட்டத்தை தனது சொந்த அரசியல் தேவைக்காகவும் சிங்களப் பெரும்பான்மை கட்சிளுக்கும் விலை பேசுகின்றார் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் அப்போது குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*









யாழ் அச்சுவேலி மத்திய கல்லூரியில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் சிறுவர் தினம், வாசிப்பு மாதத்தை முன்னிட் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தரும் தற்போதைய சமூகவியல் பேராசிரியருமான என்.சண்முகலிங்கன் அவர்களின் சொற்பொழிவும் ஆசிர்வாத நிகழ்வும் நடைபெற்றது. நிகழ்வின் சில பதிவுகள்....





# இன்று எமது நாட்டின் சில நிலைமைகள் தொடர்பில் கவலை அடையவேண்டியுள்ளது: கரு ஜயசூரிய!

கொழும்பு, ஒக்.12

இன்று எமது நாட்டின் சில நிலைமைகள்தொடர்பில்கவலை அடையவேண்டியுள்ளது என்று கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், எந்த ஒரு சேவையும் மக்களுக்கு சுமையாக இருக்கக் கூடாது. உலக தபால்சேவையு டன் ஒப்பிடும்போது எமது நாட் டின் தபால்சேவை இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண் டும் என்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கண்டி பொல்கொல்லை மஹிந்த ராஜபக்ஷ மண்டபத் தில் இடம் பெற்ற உலக தபால் தின வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரி வித்தார்.




தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. 'ஹலீமின் அழைப்பின் பேரில் சபாநாயகர் கரு ஜயசூரிய இந்த வைபவத்தில் கலந்துகொண் டார்.

இங்குசபாநாயகர்கருஜயசூரிய மேலும் உரையாற்றுகையில்–

இலங்கையின் தபால்சேவை என்பது 215 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும் . அக் காலத்தில் எமது நாட்டின் தபால் சேவைக்கு பாரிய வரவேற்பு இருந்து வந்தது.

இலங்கையில் ஆரம்ப காலத் தில் தபால்சேவையில் 181 ஊழியர்கள் மட்டுமே இருந்தனர். இன்று அது 26 ஆயிரம் ஊழியர் களாக அதிகரித்து நாடளாவிய ரீதியில் மக்களுக்கு சேவை களை வழங்கும் ஒரு முக்கிய சேவையாக திகழ்கிறது.

இன்று தபால் துறைக்கு பொறுப்பாக ஒரு சிறந்த அமைச்சர் இருக்கின்றார்' அவர் தூரநோக்குடன் செயல்பட்டு தபால் துறையின் முன்னேற்றத் திற்கு சேவைகளை செய்து வரு வதை எங்களால் காண முடிகின் றது.

இன்று உலக நிலைகளை அவதானிக்கும் போது தபால் சேவையும் பல முன்னேற்றங் களை கண்டுள்ளது. அதே போன்று புதிய அம்சங்களை உள்வாங்கி எமது நாட்டின் தபால் சேவையையும் முன்னேற்ற முன் வரவேண்டும். எந்த ஒரு சேவையும் மக்களுக்கு பார மாக இருக்கக் கூடாது.

இன்று எமது நாட்டின் சில நிலைமைகள்தொடர்பாககவலை அடையவேண்டியுள்ளது. பல இடங்களிலும் எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்கள் நடத்துகின்றனர். பாதைகளை மறைத்து டயர் எரித்து ஆர்ப்பாட்டம் நடாத் துகின்றனர். இவை அனைத்தும் தேசத் துரோக செயல் என்றே கூறவேண்டும் , இவ்வாறான செயல்களினால் எமது நாடு தினம் பின்னோக்கிச் செல்கின் றது என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

## வர்த்தகர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறு கோரி மகஜர் கையளிப்பு



கல்முனை வர்த்தகர்கள் எதிர் நோக்கி வரும் பல்வேறு பிரச்சி னைகளுக்கு தீர்வு வழங்குமா றும், வர்த்தக சேவைக்கான உட்கட்டமைப்புவசதியை ஏற்படுத் தித்தருமாறும் கோரி கல்முனை மாநகர முதல்வரிடம் கல்முனை வர்த்தக சங்கம் நேற்று மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

கல்முனை வர்த்தக சங்கத் திற்கும் கல்முனை முதல்வர் சட்டத்தரணி ஏ. எம் .ரகீபிற்கும் இடையிலான சந்திப்பு மாநகர முதல்வர்அலுவலகத்தில் நடை பெற்றது.

இதன்போது வர்த்தகர்கள் எதிர்நோக்கி வரும் சவால்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி உட்கட்டமைப்புபொதுவசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மக்கள் நலசெயற்பாடுகளை விரைவுபடுத் துமாறும் வேண்டியதுடன் தமது கோரிக்கைகள்உள்ளடங்கிய மகஜரையும் முதல்வரிடம் கைய ளித்தனர்.

இந்தச் சந்திப்பில் பல விடயங் கள் கடலந்துரையாடப்பட்டதுடன் சாத்தியமான வழிகளில் விரை வாக தீர்வினை பெற்றுத் தரு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக சமூக பிரதிநிதிகளிடம் கல்முனை முதல்வர் ஏ.எம்.ரகீப் வாக்குறுதி அளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பத்தரமுல்லையில் பெரும் தீ விபத்து!




கொழும்பு, ஒக்.12

பத்தரமுல்லை பகுதியில் அமைந்துள்ள தனியார் ஆடை யகம் ஒன்றில் நேற்று பெரும் தீ பரவல் ஏற்பட்டது என்று தீய ணைப்பு படையினர் தெரிவித் துள்ளனர்.

பத்தரமுல்லை– பெலவத்த பகுதியில் அமைந்துள்ள இந்த தனியார் ஆடையகத்தில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர்.

இந்த தீ பரவல் காரணமாக கொட்டாவ தொடக்கம் பொரலை வரையான (174 ஆம் இலக்க பஸ் மார்க்கம்) தற்காலிகமாக மூடப்பட்டது என வீதி போக்கு வரத்து அதிகார சபை தெரிவித் துள்ளது.

## பிள்ளையானின் விடுதலையை வலியுறுத்தி நேற்று விசேட பூஜை!



பிள்ளையான் என அழைக் கப்படும் கிழக்கு மாகாண முன் னாள் முதலமைச்சர் சந்திர காந்தன் கைது செய்யப்பட்டு நேற்றுடன் 3 ஆண்டுகள் பூர்த்தி யடையும் நிலையில் அவரின் விடுதலையை வலியுறுத்தி விசேட பூஜையொன்று நடத் தப்பட்டுள்ளது.

இந்த விசேட பூஜை நேற்றுக் காலை வாவிக்கரை வீதியில் உள்ள முருகன் ஆலயத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுள்ளது.

இந்த வழிபாடுகளில் கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப் பினர்கள் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் வழிபாட்டிற்கு பின்னர் தமிழ் மக்கள் விடுத லைப்புலிகள் கட்சியின் உறுப் பினர்கள் கருத்து தெரிவிக் கையில்–

சந்திரகாந்தன் கிழக்கு மாகா ணத்தை ஆட்சி செய்த காலப் பகுதியிலேயே மட்டக்களப்பு மாவட்டம் பாரிய அபிவிருத்தி கண்டு வந்தது.

தொடர்ந்து அந்த அபிவிருத் தியை அவரால் மட்டுமே செய்ய முடியும். விசாரணை என்னும் பெயரில் எமது தலைவரை சிறை யில் வைத்து இழுத்தடிப்பினை இந்த நல்லாட்சி அரசு செய்து வருகின்றது.

எனவே, இன்னும் காலத்தை இழுத்தடிக்காமல் அவரை விடுதலை செய்ய நடவடிக்கை யெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அலோசியஸ், பலிசேனவின் மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு!

கொழும்பு, ஒக்.12

பெர்ப்பச்சுவல் ட்ரசீஸ் நிறுவ னத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்நிறு வனத்தின் நிறைவேற்றுப் பணிப் பாளர் கசுன் பலிசேன ஆகியோ ரால் தாக்கல் செய்யப்பட்ட மே லாய்வு பிணை மனுவை மேன் முறையீட்டு நீதி மன்றம் நிராகரித் துள்ளது.



அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகிய இருவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இவர்களால் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விநியோக மோசடி தொடர்பிலேயே இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி திட்டப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.12

அமைச்சர் ரிஷாத்பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங் களுக்கான அபிவிருத்திவேலைத் திட்டங்கள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு மாந்தை பிரதேச இணைப்பாளர் சனூஸ் தலைமையில் இடம்பெற் றுள்ளது.



இதன்போது ஆண்டான்குளம் ஆயிசா மஸ்ஜித், சொர்ணபுரி முகைதீன் ஜும்மா பள்ளி, மினுக் கன் அன்னூர் ஜும்மா மஸ்ஜித், வட்டக்கண்டல் முகைதீன் ஜும்மா பள்ளி, கட்டைக்காடு முஹைதீன் ஜும்மா பள்ளி மற்றும் பள்ளி வாசல்பிட்டி பாடசாலைக்கான சுற்று மதில் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மழை குறுக்கிட்டமையால் இங்கிலாந்து - இலங்கை முதலாவது போட்டி ரத்து



இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இடைவிடாத மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் தம்புள்ளை மைதானத்தில் ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்துள்ளது.

அதன் பிரகாரம் இங்கிலாந்து அணி 15 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்து 92 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அணி சார்பில் ஜேசன் ரோய் 24, ஜொன்னி பெயர்ஸ்டோ 25, ஜொய் ரூட் ஆட்டமிழக்காமல் 25, மோர்கன் அட்டமிழக்காமல் 14 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட போது மழை குறுக்கிட்டதால் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

பின்னர் தொடர் மழை காரணமாகப் போட்டி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லாராவால் கூட முடியவில்லை



இந்திய மண்ணில் லாரா இடம்பிடித்திருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியால் கூட தொடரை வெல்லமுடியவில்லை என்று அந்த அணியின் தலைவர் ஹோல்டர் தனது அிணி மீதான விமர்சனத்திற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. ராஜ்கோட்டில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 272 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அனுபவம் இல்லாத மேற்கிந்தியத் தீவுகள் அணி என்றாலும், துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்ததால் பெரும்பாலான முன்னாள் வீரர்கள் விமர்சனம் எழுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் லாரா இடம் பிடித்திருந்த அணியால் கூட இந்திய மண்ணில் தொடரைக் கைப்பற்ற முடியவில்லை என்று தற்போதைய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஜேசன் ஹோல்டர் விமர்சனத்திற்குப் பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கேப்டன் ஜேசன் ஹோல்டர் கூறுகையில் "நாங்கள் நம்பர்–1 அணியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறோம். அதுவும் அவர்களுடைய சொந்தத மண்ணில். 1994 இல் இருந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்திய மண்ணில் வெற்றி பெற்றது கிடையாது என்பதை வரலாறே சொல்லும். அப்போதைய மேற்கிந்தியத் தீவுகள் அணியை பார்த்தீர்கள் என்றால், பிரையன் லாரா மற்றும் தலைசிறந்த வீரர்கள் இருந்தார்கள்" என்றார்.

# மெத்வதேவிற்கு அதிர்ச்சி கொடுத்தார் பெடரர்!



சங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின், ஆண்கள் ஒற்றையர் பிரிவு, 2 ஆம் சுற்றுப் போட்டியில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்று 3 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற 2 ஆம் சுற்றுப்போட்டியில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் மற்றும் ரஷ்யா வீரர் டானில் மெத்வதேவ் பலப் பரீட்சை நடத்தியிருந்தனர்.

இதில் முதலாவது செற்றை 6 – 4 என ரோஜர் பெடரர் கைப்பற்றியிருந்தார். பின்னர் ரோஜர் பெடரருக்குக் கடும் நெருக்கடி கொடுத்த மெத்வதேவ் 2 ஆவது செற்றை 6 – 4 எனக் கைப்பற்றினார்.

இதனால் பரபரப்பாக நடைபெற்ற வெற்றியை தீர்மானிக்கும் இறுதி செட்டில் மெத்வதேவிற்கு அதிர்ச்சி கொடுத்த ரோஜர் பெடரர் 6 – 4 என செற்றைக் கைப்பற்றி வெற்றி பெற்றார்.

இறுதியில் 6–4, 4–6, 6–4 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறிய பெடரர், மூன்றாம் சுற்றில் ஸ்பெயின் வீரர் பஸ்டிஸ்டா அகுட்டை எதிர்கொள்ளவுள்ளார்.

# சேவாக்குடன் பிரித்வி ஷாவை ஒப்பிடாதீர்கள்



பிரித்வி ஷாவை சேவாக்குடன் ஒப்பிடும் முன்னர் ஒரு முறைக்குப் பலமுறை யோசிக்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் ஆரம்ப துடுப்பாட்டக்காரருமான கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

ராஜ்கோட்டில் இடம்பெற்ற இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இறுதி டெஸ்ட் போட்டியில் பிரித்வி ஷா தனது அறிமுகப் போட்டியிலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி, அதிரடியாக 99 பந்துகளை எதிர்கொண்டு 15 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதனால் அவருக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

மேலும் அவர் அதிரடியாக விளையாடியதனால் சேவாக்குடனும், இளம் வயதில் சதம் விளாசியதால் சச்சின் டெண்டுல்கருடனும் ஒப்பிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இது குறித்து கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளதாவது –

பிரித்வி ஷாவை சேவாக்குடன் யார் ஒப்பிடு செய்தாலும் அதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசனை செய்ய வேண்டும். ஒருவரை மற்றொருவருடன் ஒப்பிடக்கூடாது. பிரித்வி ஷா தற்போது தான் டெஸ்ட் கிரிக்கெட்டைத் தொடங்கியுள்ளார். அவர் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

பிரித்வி ா தனிப்பட்ட திறமையைப் பெற்றுள்ளார். அதேபோல் சேவாக் அவரது திறமையைப் பெற்றுள்ளார். பிரித்வி ா தற்போதுதான் அறிமுகம் ஆகியுள்ளார். சேவாக்கைப் போன்றோர் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

பிரித்வி ஷா தனது டெஸ்ட் கிரிக்கெட்டை சிறந்த முறையில் தொடங்கியுள்ளார். ஆனால், அவருக்கு மிகப்பெரிய சவால் காத்திருக்கிறது – என்றார்.

# உமேஷ் யாதவ் அதிர்ஷ்டமற்றவர்

உமேஷ் யாதவுக்கு தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்தில் அதிக அளவில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கவில்லை என பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் உமேஷ் யாதவ். அதிவேக பந்து வீச்சால் எதிரணி வீரர்களை அச்சுறுத்தக் கூடியவர். ஆனால் இந்தியா தென்னாபிரிக்கா, இங்கிலாந்து சென்று விளையாடும்போது அவருக்கு போதிய அளவு வாய்ப்பு கிடைக்கவில்லை.

8 டெஸ்ட் போட்டியில் ஒன்றில் மட்டுமே விளையாடினார். 2018 இல் இந்தியா விளையாடியுள்ள டெஸ்ட் போட்டிகளில் மூன்றில் மட்டுமே களம் இறங்கியுள்ளார். சிறப்பாக பந்து வீசும் உமேஷ் யாதவுக்கு அதிர்ஷ்டம் இல்லை என பந்து வீச்சு பயிற்சியாளர் பரத் அருண் தெரிவித்துள்ளார்.

உமேஷ் யாதவ் குறித்து பரத் அருண் கூறுகையில் "இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா தொடரில் ஏராளமான போட்டியில் உமேஷ் யாதவ் விளையாட முடியாமல் போனது உண்மையிலேயே துரதிருஷ்டவசமானது. இதற்கு முக்கிய காரணம் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசியதுதான்.

எங்களுடைய திட்டம் பந்து வீச்சாளர்கள் புத்துணர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதுதான். இதில் உமேஷ் யாதவ் ஒரு பகுதி. உமேஷ் யாதவால் அணிக்கு சிறப்பான பங்களிப்பை கொடுக்க முடியும் என்பதில் நாங்கள் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம்" என்றார்.

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதி வழியாக திருகோணமலை நோக்கிப் பயணித்த கார் ஒன்று வவுனியா, மயிலங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து சுமார் 10 மீற்றர் தூரம் ஓட்டோ இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர். மயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியான எஸ்.இராஜகருணா (வயது-58), பெரியதம்பனை சேர்ந்த த.பாஸ்கரன் (வயது-42) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தனர். கூமாங்குளத்தைச் சேர்ந்த தெ. விஜிதரன் (வயது 29) என்பவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர். (ஐ-100)

## பட்ஜெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் கூட்டம் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது. நகல் வடிவ அறிக்கையை இறுதி செய்து அதனை நகல் வரைவாக எதிர்வரும் 25 ஆம் திகதி அரசமைப்புப் பேரவைக்கு முன்வைப்பது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் ஆராய்வது எனஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

நகல் வடிவ அறிக்கையின் சிங்கள, ஆங்கிலப் பிரதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. இதன் தமிழ் வடிவமும் கடந்த வாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் அந்த நகல் வடிவ அறிக்கையின் தமிழ் வடிவம் தொடர்பில் புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்றைய கூட்டத்தில் சர்ச்சை ஒன்றைக் கிளப்பினார். அறிக்கையின் தமிழ் வடிவத்தில் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற சிங்களச் சொல்லுக்கு 'ஒருமித்த நாடு' என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்றால் ஒற்றையாட்சி என்றே அர்த்தம். இவ்வாறு இருந்தால் எப்படி ஏற்றுகொள்வது என்று டக்ளஸ் தேவானந்தா நேற்றைய கூட்டத்தில் கருத்தை முன்வைத்தார். இதனைச் சாதகமாக்கிய மஹிந்த தரப்பின் உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்து தொடர்பில் ஆராய்வதற்கும், தமது சிங்களப் பிரதியைப் பரிசீலிப்பதற்கும் மேலும் கால அவகாசம் தேவை–என்றார்.

இதனையடுத்து வழிகாட்டல் குழுவை எதிர்வரும் 25ஆம் திகதி மீண்டும் கூட்டுவது எனவும், அதன் பின்னர் அரசமைப்புப் பேரவையை எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி பட்ஜெட் தினத்தன்று காலையில் கூட்டிபுதிய அரசமைப்புக்கான நகல் அறிக்கையை நகலாக ஏற்று விவாதம் நடத்தலாமா என்பது குறித்து தீர்மானிப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கை எதனையும் இதுவரை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன்.

அரசியல் கைதிகள் தொடர்பில் நேற்று பொது அமைப்புக்களுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்குப் பல கடிதங்களை எழுதியிருக்கின்றேன். பல சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பேசியிருக்கின்றேன். மீண்டும் மீண்டும் அதனைச் செய்து இப்போது நான் களைத்துப் போயிருக்கின்றேன்.

நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், தான் நடவடிக்கைகளை எடுப்பார் என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் கூறியபோதும் ஒரு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளாரே தவிர அரசியல் கைதிகள் விடயத்தில் ஒரு முழுமையான தீர்வைக் காணவில்லை.

அரசியல் கைதிகள் என இந்த நாட்டில் யாரும் இல்லை என அண்மையில் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள கூறியிருக்கின்றார். அவருடைய அந்தக் கருத்து மிகத் தவறானது.

இன்று சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அரசியல் காரணங்களுக்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பிரத்தியேக சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் அவர்களைக் குற்றவாளிகள் ஆக்கமுடியாது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்து கைதுகள்,வழக்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்து குற்றவாளிகள் ஆக்க இயலாது. இதனை நான் உயர்நீதிமன்றில் பல காலங்களுக்கு முன்னரே கூறியுள்ளேன்.

குறிப்பாக நாகமணி வழக்கு என்ற வழக்கில் குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருவரைக் குற்றவாளி ஆக்குவதற்கு முன்னர் அந்த வாக்குமூலத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் உண்மையானவையா என்பதைத் தனிப்பட்ட சாட்சியங்கள் ஊடாக உறுதிப்படுத்தியதன் பின்னதாகவே குற்றவாளியாக அடையாளப்படுத்தலாம் – எனத் தெரிவித்துள்ளேன்.

வெறுமனே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்துக் கொண்டு குற்றவாளி ஆக்க இயலாது. ஆனால் இங்கு அது தான் நடந்திருக்கின்றது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவர்கள் குற்றவாளி ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்கள். இது சட்டத்திற்குப் புறம்பானது.

இவ்வாறான நிலையில் நீதியமைச்சர், அரசியல் கைதிகளே இல்லை என கூற இயலாது. அரசியல் காரணங்களுக்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். வழக்கமான சட்டத்திற்கு மாறான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெற்றுள்ளன. சிலர் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். ஆகவே அவர்கள் அரசியல் கைதிகள்தான். அதனை எவரும் மறுக்க இயலாது – என்றார். (ஐ-07)

## கள்ளநோட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வர்த்தக நிலையமொன்றில் கள்ள நோட்டுக்களை வைத்துப் பொருள்களை வாங்குவதற்கு இரண்டு இளைஞர்கள் முற்பட்டனர்.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வர்த்தகர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிஸார் அங்கு சென்று இரு இளைஞர்களையும் கைது செய்தனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது வட்டுக்கோட்டை மற்றும் நல்லூர்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்தது.

அவர்களிடம் 21ஆயிரம் ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்களை பொலிஸார் மீட்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள பல்பொருள்கள் வர்த்தக நிலையத்தில் 5ஆயிரம் ரூபா கள்ளநோட்டை வைத்துப் பொருள் வாங்க முற்பட்ட ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். (ஐ-07)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தமை போன்று இந்தியர்களும் இலங்கையர்களும் உறவினர்கள் என்பது எனது கருத்து.நாங்கள் ஒரு குடும்பமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளை முன்னாள் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் அழித்தமைக்காக இந்தியர்களாகிய நாங்கள் உங்களை மெச்சுகின்றோம். இதன் மூலம் நீங்கள் இலங்கையை மாத்திரம் பாதுகாக்கவில்லை, இந்தியாவையும் பாதுகாத்துள்ளீர்கள்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை உங்கள் அரசே மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு – கிழக்கில் உள்ள இலங்கையர்கள் முதலில் தங்களை இலங்கையர்களாக கருதவேண்டும், அதன் பின்னரே தமிழர்களாக கருதவேண்டும். சிங்களவர்களும் அவ்வாறே தங்களைக் கருதவேண்டும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் அதன் பயனை இழந்துவிட்டது.

சிங்கள எதிர்ப்பு தமிழ்ப் பிரிவினைவாத இயக்கங்கள் தமிழ் நாட்டில் தோல்வியடைந்துவிட்டன;பலமிழந்துவிட்டன. மஹிந்த சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டவேளை ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம்பெறாதமை இதற்குச் சிறந்த உதாரணம்.

மஹிந்தவுக்கும் இந்திய பிரதமருக்கும் இடையில் ஆக்கபூர்வமான – சுமூகமான சந்திப்பு இடம்பெற்றது. அவர்கள் இருவருக்கும் இடையில் மாத்திரமே பேச்சுக்கள் இடம்பெற்றமையால் என்ன பேசினார்கள் என்பது தெரியாது.

திருகோணமலை துறைமுகத்தை யாருக்கு வழங்கவேண்டும்என தீர்மானிப்பது இலங்கைக்குரிய விடயம் – என்றார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டது.

அரசமைப்புச் சபைக்கு மொத்தமாக 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும். அதில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மூவரும் இடம்பெறவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். சிவில் உறுப்பினர்கள் தேர்வுக்குத் தற்போது சபை அங்கீகாரமளித்தால் இன்று (நேற்று) மாலைக்குள் அந்த நியமனமும் இடம் பெற்றுவிடும்.

இதன்படி புதிய பிரதம நீதியரசரைத் தேர்ந்தெடுப்பதற்காக அரசமைப்புச் சபை நாளை (இன்று) கூடும் – என்றார் சபாநாயகர். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் இன்று காலை இடம்பெறவுள்ளது.

கைதடியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் முற்பகல் 11மணிக்கு இந்தக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இது குறித்து வடக்கு முதலமைச்சர் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தித் தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களுடைய உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. எனவே அவர்களுடைய விடுதலை தொடர்பாகவும், அவர்களுடைய உயிர் பாதுகாப்பு தொடர்பாகவும் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது.

இதனடிப்படையில் இன்று (நேற்று) அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்திரு எம்.சக்திவேல் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்துப் பேசியிருந்தார்கள். இதனடிப்படையில் நாளை (இன்று) முற்பகல் 11 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறும் – என்றார். (ஐ-07)

## மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி, பத்தமேனி சூசையப்பர் வீதியில் இலங்கை மின்சாரசபையினர் மின் கம்பமொன்றை நாட்டுவதற்காக நேற்று நிலத்தைத் தோண்டினர். இதன்போதே நிலத்துக்குள் இருந்து மண்டையோடு, கை, கால்கள் உள்ளிட்ட எலும்புக் கூட்டுப் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் முன்னர் யுத்தம் நடைபெற்றுள்ளதாகவும், அதன் பின்னர் இப்பகுதி முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-07)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாலும், வெளிப்படைத்தன்மையான செயற்பாடுகள் இல்லாமையாலும், இந்தப் பணிகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'எங்களால் ஏன் வீடு செல்ல முடியாது, இலங்கையில் இராணுவத்தின் காணி சுவீகரிப்பு' என்ற பெயரில் 80 பக்க அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளது.

இதில், காணி விடுவிப்பு விடயங்களில் வெளிப்படைத் தன்மை இல்லாமை, உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமை, சுவீகரிக்கப்பட்ட காணிகளது தரவுகள் இல்லாமை, பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடு வழங்கப் பாரிய கால தாமதத்தை ஏற்படுத்தியுள்ளமை போன்ற விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அத்துடன் சுவீகரிக்கப்பட்ட காணிகள் பல, இராணுவத்தினரால் தேசிய பாதுகாப்பு தேவைக்காக அன்றி, வர்த்தக நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ஐ)

## காணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படைத் தளபதிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தற்போதும் 4 ஆயிரத்து 265 ஏக்கர் காணி பாதுகாப்பு படையினர் வசமுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவற்றில் மக்களிற்குச் சொந்தமான காணிகள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட கட்டங்கள் அனைத்தும் உரியவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், அதற்காக மாவட்டந்தோறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள் அனைவரும் கூடி ஆராய்ந்து அதன் அறிக்கையை உடன் தனக்குச் சமர்ப்பிக்குமாறும் வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணி கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலையை நோக்கிக் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருந்த நடைபவனி நேற்று நண்பகல் புளியங்குளத்தைச் சென்றடைந்தது.

இந்த நடைபவனி நேற்றுக் காலை மாங்குளம் ஊடாக முன்னெடுக்கப்பட்டபோது மாங்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவ,மாணவிகள், அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பல்கலைக்கழக மாணவர்களின் நடைபயணத்துக்கு வலுச் சேர்த்தனர்.

அத்துடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 15 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் மாங்குளத்திலிருந்து புளியங்குளம் வரையான நடைபவனியில் பங்கேற்றுத் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். (ஐ)

## அரசமைப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அரசமைப்புச் சபையினால் அனுமதியளிக்கப்பட வேண்டும்.

அரசமைப்புச் சபையில் சபாநாயகர் பதவி வழியாகத் தலைவராக இருப்பார். பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவி வழியாக உறுப்பினர்களாக இருப்பர். ஏனைய 6 உறுப்பினர்களில் 3 பேர் அரசியல் ரீதியாகவும் 3 பேர் சிவில் சமூகப் பிரதிநிதிகளாகவும் இருப்பர். அவர்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நியமிப்பர்.

வெற்றிடமாக உள்ள 6 உறுப்பினர்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியான அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் பதவிக்காலம் நிறைவடையவில்லை. ஏனைய 5 உறுப்பினர்களை அரசமைப்புச் சபைக்கு நியமிப்பதில் இழுபறியான நிலை காணப்பட்டது.

அரசமைப்புச் சபைக்கான சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் முன்மொழிந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகச் சட்ட பீடத்தின் மூத்த விரிவுரையாளர் நாகநாதன் செல்வக்குமரன், கல்வியாளரும், இராஜதந்திரியுமான ஜாவிட் யூசுப், முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபால ஆகியோரின் பெயர்களையே சபாநாயகர் முன்வைத்தார்.

அவர்கள் மூவரையும் நியமிக்க நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது. (ஐ)

# தமிழ் அரசியல்வாதிகளுக்கே புனர்வாழ்வு வழங்கவேண்டும்

## அரசியல் கைதிகளுக்கு அது பொருத்தமற்றது என்கிறார் அருட்திரு எம்.சக்திவேல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கவேண்டிய தேவையில்லை. தமிழ் மக்களுக்கு மாறாக அல்லது தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக உள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கே புனர்வாழ்வு வழங்கப்படவேண்டும். தமிழ் அரசியல் கைதிகளுக்கு அது பொருத்தமற்றது. அவர்கள் நிபந்தனையின்றி விடுதலைசெய்யப்படவேண்டியவர்கள்.

இவ்வாறு தெரிவித்துள்லார் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்திரு எம்.சக்திவேல்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைதொடர்பில்நேற்றுவடக்கு முதலமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 29 நாள்களாக 11 தமிழ் அரசியல்கைதிகள் தொடர்ச்சியான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்கள் தனிப்பட்ட விடயங்களுக்காகப் போராட்டம் நடத்தவில்லை. தமிழ் மக்களின் அரசியல் சார்ந்த விடயங்களுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள்.

அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்காற்றியமையால் இன்று சிறைகளில் உள்ளார்கள். எனவே அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடவேண்டிய கடமை தமிழ் மக்களுக்கு இருக்கிறது. கடந்த 2015ஆம் ஆண்டு 9ஆம் மாதம் மகஸின் சிறைச்சாலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தார்.

ஆனால் அந்த வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில் அரசின் மீதும், அவர்களுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் நம்பிக்கை இழந்த நிலையிலேயே அரசியல் கைதிகள் இன்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலையும், அவர்களின் உயிர்களும் இன்று தமிழ் மக்களின் கைகளில் இருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அரசு கூறுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு பொது மன்னிப்பு குறித்து பேசிக் கொண்டிருக்கின்றார். பொதுமன்னிப்பு யாரிடம் கேட்கவேண்டும்? தமிழ் மக்களை அழித்தவர்களிடம் பொது மன்னிப்பு கேட்பதா? இதுவா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு? மன்னிப்பு கேட்பதாக இருந்தால் அவர்கள் போராட்டத்துக்குக் கொடுத்துள்ள விலை என்ன?

ஆகவே மன்னிப்பு என்பது தேவையற்றது. எந்த நிபந்தனையும் இல்லாமல் சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும். இதேபோல் புனர்வாழ்வு குறித்தும் பேசுகிறார்கள். யாருக்கு புனர்வாழ்வு? அரசியல் கைதிகளுக்கா?அரசியல்வாதிகளுக்கா? உண்மையில் அரசியல்வாதிகளுக்கே பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும்.

தமிழர்களுக்குப் புறம்பாக அல்லது தமிழர்களின் அபிலாஷைகளுக்குப் புறம்பாக இருக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கே உண்மையில் புனர்வாழ்வு வழங்கப்படவேண்டும். நிச்சயமாக மக்கள் இவ்வாறானவர்களுக்குத் தேர்தல் ஊடாகப் புனர்வாழ்வு கொடுப்பார்கள். கொடுக்கவேண்டும்.

இராணுவத்துக்கும், அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வு வழங்குவது குறித்துப் பேசப்படுகின்றது. அப்படியானால் இராணுவம் யுத்தக் குற்றங்களைச் செய்தது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த யுத்தக் குற்றங்களைச் செய்தவர்கள் யார்? அவர்களுடைய பதவிநிலைகள் என்ன? அவ்வாறான குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு விசாரணைகள் நடந்துள்ளதா? தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளனவா? புனர்வாழ்வு வழங்கும் நிலையில் அவர்கள் உள்ளார்களா? என்பதையும் அரசு கூறவேண்டும்.

நாங்கள் கூறும் அரசியல் கைதிகள் நீண்டகாலம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள். குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள். ஆகவே 107 தமிழ் அரசியல் கைதிகளை வைத்து இராணுவத்தைப் பாதுகாப்பதற்கு யாரும் முயற்சிக்கக் கூடாது. அவர்களைப் பலிக்கடாக்களாகப் பயன்படுத்தக் கூடாது.

கடந்த வருடமும் வரவு – செலவுத்திட்டம் வந்தபோது நான் இரா. சம்பந்தனைச் சந்தித்து அரசியல் கைதிகள் விடுதலைக்கான நிபந்தனைகளைவிதித்துவரவு–செலவுத் திட்டத்துக்கு ஆதரவு கொடுங்கள் எனக் கேட்டேன். ஆனால் அது நடக்கவில்லை. அப்போதே தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை என்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தபோது 10 அம்சக் கோரிக்கையை தாங்கள் முன்வைத்தனர் எனவும், அதில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான ஒரு விடயமும் உள்ளது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறியமையுடன், அதனைப் பிரதமர் ஏற்றுக் கொண்டு பின்னர் கூட்டம் ஒன்றைக் கூட்டுவார் எனவும் கூறப்பட்டது. ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை.

இந்நிலையில் மீண்டும் வரவு – செலவுத் திட்டம் வருகிறது. இப்போது அரசியல் கைதிகள் தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தமுறை வரவு – செலவுத் திட்டத்திற்கான வாக்கெடுப்பின்போதாவது இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (ஐ–07)




## ‘சேபிதா டி.எஸ்.’ திரைப்படம் வெளியீடு

சுனீத் மாலிங்க லொக்குகேவாவின் இயக்கத்தில் தயாரான ‘சேபிதா டி.எஸ்.’ என்ற திரைப்படத்தின் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம், மெஜெஸ்டிக் சினெபிளக்ஸ் திரையரங்கத்தில் இடம்பெறுகின்றது.

திரைப்படத்துறையினர், அரசியல் தலைவர்கள் முக்கியஸ்தர்கள், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றுவர்.

## வாகனம் வழங்கக் கோரி குப்பை வண்டியில் பயணித்தார் வவுனியா நகரசபைத் தவிசாளர்



வவுனியா, ஒக். 12

வவுனியா நகரசபைத் தவிசாளர் நகரசபையில் வாகனம் இல்லாத காரணத்தால் குப்பை அள்ளும் டிராக்டரில் பயணித்த சம்பவம் ஒன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா நகரசபைத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் அடிக்கடி பழுதடைவதாகக் கூறப்படுகின்றது. இதனை அடுத்து கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வவுனியா மாவட்ட செயலகத்துக்கு நகரசபைத் தலைவர் குப்பை அள்ளும் டிராக்டரில் பயணித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த வவுனியா நகரசபைத் தலைவர். இ.கௌதமன் –

வவுனியா நகரசபைக்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் பழுதடைந்துள்ளமையால் புதிய வாகனங்களை நகரசபைக்கு வழங்குமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளபோதும் எமக்கு வாகனங்கள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அலுவலகத் தேவைக்குச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியதாக உள்ளது.

அத்துடன் வவுனியா நகரசபையின் பல்வேறு வேலைப்பிரிவுகளுக்கு ஆளணிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வவுனியா நகரசபையில் 14 ஊழியர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதுடன் நகரசபைத் தலைவர், செயலாளர் , கணக்காளர், நகரசபை ஊழியர்களின் தேவைக்கென நான்கு வாகனங்கள் தேவையாக உள்ளன. எனவே இவற்றை உடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (ஐ)

## அ’புரம் சிறைக்கு அனந்தி



கொழும்பு, ஒக். 12

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்று அனுராதபுரம் சிறையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ச்சியாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகள் 13 பேர் மிகவும் உடல் நலம் குன்றி நடமாடமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சூழலில் நேற்று அவர்களைச் சந்தித்த அனந்தி சசிதரன் கருத்து தெரிவிக்கையில் –

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளின் நிலை மிகவும் மோசமானதாக உள்ளது. நடக்க முடியாதவர்களாகவும் செவிப்புலன் குறைந்துள்ளவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர். கைத்தாங்கலாக வரக்கூடிய நிலையில் உள்ள 5 பேரை மாத்திரம் சந்தித்தேன்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். அவ்வாறு விடுதலை செய்வதில் சிக்கல் நிலை காணப்படுமாயின் தங்களை மிகக் குறுகியகால புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இவ்வாறு மிகவும் மோசமாக உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் தெளிவாக அரசியல் கைதிகள் பேசுகின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்கின்ற வகையில் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமையையும் நாங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது.

அரசியல் கைதிகள் உணவின்றிச் சாவுக்குப் போராடிக் கொண்டிருக்கின்றபோது நாம் பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு மக்கள் பிரதிநிதிகளாக அரசுக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிலையில் இருந்து மாற வேண்டும் – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.